**செய்தி வெளியீடு எண்: 47** **தேதி: 30.09.2024**

## <u>ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு - பத்திரிக்கை செய்தி</u>

## <u>அக்டோபர் 1, 2024 (செவ்வாய்கிழமை) காலை 7:00 மணியளவில் சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெறும் "தூய்மையே சேவை" தூய்மை பணியில் கலந்துகொள்ள ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு அன்புடன் அழைக்கிறது.</u>

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, அவர்களுடன் கலந்துகொள்ள உங்களை ஆளுநர் மாளிகை அன்புடன் அழைக்கிறது. அக்டோபர் 1, 2024 (செவ்வாய்கிழமை) காலை 7:00 மணியளவில் சென்னை காந்தி மண்டபத்தில் "தூய்மையே சேவை" வெகுஜன தூய்மை பணியில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து மாணவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர்களுடன் மாண்புமிகு ஆளுநர் கலந்து கொள்கிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், அனைத்து பங்கேற்பாளர்களுடன் சேர்ந்து, தூய்மையான மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான நமது பகிரப்பட்ட பொறுப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் "தூய்மையே வலியுறுத்தும் உறுதிமொழியை" எடுத்துக் கொள்வார்கள்.

"தூய்மையே சேவை" பணியில் எங்களுடன் இணைந்து, தூய்மை, சமூக சேவை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் எங்களது கூட்டு அர்ப்பணிப்புக்கு பங்களிக்கவும்.

..........................................................................................................................

ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு வெளியிடு :-

தேதி: 30.09.2024 மக்கள் தொடர்பு அலுவலகம்